பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை 06.11.2020 கதிர் 232

## வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டவர் யாழில் சாவு!

வடமராட்சி முள்ளி பகுதியில் வீதி திருத்த பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி றோலருக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

பனாங்கொடை பகுதியை சேர்ந்த எஸ்.பி. பிரேமரட்ன (வயது 62) எனும் நபரே உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி - கொடிகாமம் வீதி திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2

# சுகாதாரக் கட்டுப்பாடுகளைப் புறந்தள்ளி யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டம்

## கொரோனா அபாயப் பகுதியான கொழும்பில் இருந்து வந்த அமைச்சர்களுடன் தமிழ் எம்.பிக்கள், அதிகாரிகள் பங்கேற்பு



யாழ்ப்பாணம்,நவம்பர் 06

அரசால் அறிவிக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மீறி - தனிமைப்படுத்தல் சட்டத்தை உதாசீனம் செய்து - யாழ். மாவட்ட செயலகத்தின் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களது பாதுகாப்புப் பிரிவினர் என நூற்றுக்கணக்கானோர் கிராமிய பொருளாதார மேம்பாட்டுக் கூட்டத்தை இன்று நடத்தியுள்ளனர்.

2

## எழுத்துமூல உத்தரவையும் மீறியே யாழ். கச்சேரியில் கூட்டம் நடந்தது

### மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் கூட்டம் நடத்த முடியாது என மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி எழுத்தில் அறிவுறுத்தல் வழங்கிய பின்பும் அதனை மீறியே இன்றைய கூட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாநகர எல்லைப் பகுதிக்குள் கல்யாண மண்டபங்கள், உணவகங்கள், பஸ்கள் ஆகியவற்றுக்கு மட்டும் கட்டுப்பாடு விதித்துவிட்டு அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரிகள், அரசியல்வாதிகள் 200 இற்கும் மேற்பட்டோர் மாவட்டச்செயலகத்தில் ஒன்றுகூடும் போது சுகாதார வைத்திய அதிகாரி உறக்கத்தில் இருக்கின்றனர் எனக் குற்றம் சாட்டப்படுவது தொடர்பில்

2

## யாழில் எங்களுக்கு ஒரு சட்டம் உங்களுக்கு இன்னொரு சட்டமா?

### அதிகாரிகளிடம் மண்டப உரிமையாளர்கள் ஆதங்கத்துடன் கேள்வி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எமது மண்டபங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் 50 பேருக்கு மேல் பங்குகொண்டால் தடை எனக் கூறியவர்கள் தற்போது முழுமையாகத் தடை செய்த பின்பு தமது மண்டபத்தில் 200 பேருடன் கூட்டத்தை நடத்தியமை எந்தவகையில் நியாயமானது என மண்டப உரிமையாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

உணவகங்களில் எவரும் அமர்ந்து உணவு உண்ண முடியாது என விதிக்கப்பட்ட தடையை சுகாதாரம் கருதி உணவக உரிமையாளர்கள் ஏற்று கடைப்பிடிப்பதால் வழமையான வியாபாரம்

2

## கிராம அலுவலகரின் கொலைக்கு நீதி கோரி மன்னாரில் போராட்டம்




நிர்வாக கிராம அலுவலகரின் படுகொலைக்கு நீதி கோரி மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இன்று காலை 9 மணியளவில் பிரதேச செயலகத்தின் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2

## யாழ்.நகரின் மூன்று கடைகள் இன்று உடைத்துத் திருட்டு!

**ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம், நவ.06

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள மூன்று கடைகள் இன்று அதிகாலைவேளையில் உடைத்து பல லட்சம் ரூபா திருடப்பட்டுள்ளன.

கஸ்தூரியார் வீதியில் உள்ள ஒரு நகை கடை, சைக்கிள் விற்பனை நிலையம் என்பவற்றுடன் ஒரு களஞ்சியமும் இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளன.

இரு கடைகளின் மேற்பகுதியை பிரித்து உள் இறங்கிய திருடர் கூட்டம் சைக்கிள் விற்பனை

2

# கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட இம்முறை வீடுகளிலிருந்தே தீபாவளியைக் கொண்டாடுங்கள்

### மக்களிடம் சம்பந்தன் வேண்டுகோள்



இலங்கையில் தற்போது வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள இந்து சமய மக்கள் அனைவரும் இவ்வருட தீபாவளியை வீட்டிலிருந்தே கொண்டாடுமாறு உரிமையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்

இது தொடர்பில் அவர் இன்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்துக்களது பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளிப் பண்டிகையானது இம்மாதம் 14ஆம் திகதி உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படவுள்ளது.

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள கொரோனா திடீர் பரவல் காலப்பகுதியில் வரும் இந்தப் பண்டிகை நாளில் நாம் கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்வது எமது அனைவரது

2

## யாழில் எங்களுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதியாகக் குறைவடைந்துள்ளது. யாழ். நகரில் மட்டும் உணவகங்களில் பணியாற்றிய200இற்கும்மேற்பட்டவர்களை உணவகஉரிமையாளர்கள்இடைநிறுத்தியுள்ளனர். இன்னும் சில உணவகங்கள் முழுமையாகவே பூட்டப்பட்டுவிட்டன.

இதேபோன்று மண்டபங்களில் பணியாற்றிய பல நூறு பணியாளர்கள் அதாவது சமையலாளர்கள், மண்டப பராமரிப்பாளர்கள் என அனைவரும் தொழிலை இழந்து நிற்கின்றனர். இதற்கான அறிவுறுத்தலை வழங்கியவர்கள், பரிசோதனையில் ஈடுபட்டவர்கள் அனைவரும் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் ஒரே தடவையில் 200 இற்கும் மேற்பட்டோர் அருகருகே அமர்ந்து 3 மணிநேரம் கலந்துரையாடியுள்ளனர்.

அவ்வாறானால் சட்டம் - ஒழுங்கு ஏழைகளுக்கு மட்டுமா? அது அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பொருந்தாதா? தினம் உழைத்து உண்பவன் வயிற்றில் மண் அள்ளிப்போட்டு விட்டு அதிகாரிகள் குளு குளு அறையில் அளப்பறை நடத்தியுள்ளனர். அதற்கும் மேலாக ஊரங்குச் சட்டம் உள்ள மாவட்டத்தில் இருந்தும் அதிபயங்கரமாக கொரோனாத் தொற்று உள்ளது எனக் கூறப்படும் மாவட்டத்தில் இருந்தும் பலர் வந்திருந்தனர்.

இவை அனைத்தும் இடம்பெறும் போது எமது சுகாதார அதிகாரிகள் அனைவரும் ஓடி ஒளித்து விட்டனர். அவர்கள் சென்ற பின்பு அதாவது கள்ளன்போன பின்பு விசுவா பொல்லை எடடா என நகரின் மத்தியில் வந்து நின்று படம் காட்டுவர் - என்றனர்.

## யாழ்.நகரின் மூன்று .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் நேற்றைய விற்பனைப் பணம் வங்கியில் வைப்புச் செய்வதற்கு தயாராக இருந்த நிலையில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா களவாடப்பட்டுள்ளது.

இதேபோன்று நகை கடையின் கூரையை பிரித்து உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த நகைகள் அயன்சேவில் இருந்தமையால் திருடமுடியாமல் போயுள்ளது. வெளியில் இருந்த கால் பவுண் நகையும் குபேரன் முன்பாக இருந்த ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டுள்ளன.

களஞ்சியத்தின் பின் கதவு உடைக்க முற்பட்டபோதும் எவையும் களவாடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

களவாடப்பட்ட இரு வர்த்தக நிலையங்களிலும்சீ.சி.ரிகமெரா பொருத்தப்பட்டுள்ளபோதும் இரவு மின் இணைப்பை நிறுத்திச் சென்றமையால் அவை பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து தடயவியல் பொலிஸார் சகிதம் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

## கொரோனாத் தொற்றி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்வாழ்வுக்கும் அவசியமாகும்.

எனவே, எமது வீடுகளில் உள்ள மூத்தோர், கர்ப்பவதிகள் மற்றும் நாட்பட்ட நோய்களுடன் வாழும் உறவுகள் ஆகியோரைக் கொரொனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காகவும் எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இந்தப் பண்டிகைத் தினத்தை அவரவர் வீடுகளில் இருந்து மிகவும் அமைதியாகக்

கொண்டாடுமாறு எமது மக்களிடம் நாம் உரிமையோடு வேண்டிக்கொள்கிறோம்

அயலவர்கள் மற்றும் உறவினர் வீடுகளுக்குச் செல்வதையும், புத்தாடைகள் மற்றும் அணிகலன்கள் வாங்கச் செல்வதையும் ஆலயங்களுக்குச் செல்வதையும் இவ்வருடம் தவிர்த்து வீட்டிலிருந்தவாறே பிரார்த்தனைகளில் ஈடுபடுவதன் மூலம் எம்மை எதிர்நோக்கியுள்ள சுகாதாரச் சவாலை முறியடிப்போமாக! - என்றுள்ளது.

## எழுத்துமூல உத்தரவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவிக்கையில்,

வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் இந்தக் கூட்டம் நடத்த முடியாது என்பது உண்மை. அதற்கானவழிகாட்டலை சுகாதாரத் திணைக்களத்துக்கும் தெரிவித்து மாவட்டச் செயலாளருக்கும் எழுத்தில் அறிவித்தேன். இத்தனை பணிகளையும் மீறியே இன்று கூட்டம் இடம்பெற்றது மட்டுமன்றி எமக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

இவற்றின் அடிப்படையில் எனது அதிகார எல்லைக்குள் நான் ஆற்ற வேண்டிய பணியை ஆற்றினேன். - என்றார்.

## வீதி திருத்தப் பணியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பணியில் தொழிலாளி ஈடுபட்டிருந்த போது, பணியில் ஈடுபட்டிருந்த றோலருக்குள் சிக்குண்டு, படுகாயமடைந்துள்ளார்.

அதனை அடுத்து சக தொழிலாளர்கள் அவரை மீட்டு வைத்திய சாலையில் சேர்த்த போதிலும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

## சுகாதாரக் கட்டுப்பாடு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் கொரோனாத் தொற்று பரவல் காரணமாக சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் அபாய பிரதேசங்கள் அல்லது தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலாக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் இருந்து பிற மாவட்டங்களுக்கு செல்வோர் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும் என்ற சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை முற்றாக உதாசீனம் செய்து இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இதில் கொழும்பிலிருந்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய பாதுகாப்புப் பிரிவினர் என நூற்றுக்கணக்கானவர்கள் வந்து கலந்துகொண்டனர்.

மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் சமூக இடைவெளியைப் பேணாமல் மிக நெருக்கமாக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் எனப் பலர் அமர்ந்திருந்து கூட்டம் நடத்தியுள்ளனர்.

சாதாரணமாக அபாய பிரதேசம் அல்லது தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலாக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து வரும் மக்கள் தொடர்பாகவும், ஆலயங்கள், திருமண மண்டபங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் மக்கள் தொடர்பாகவும் அதிக அக்கறை எடுக்கும் சுகாதாரப் பிரிவினர் யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரச அதிகாரிகளும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவதை வேடிக்கை பார்த்தனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் கோயில் பூஜைகளில் வெளிமாவட்டத்தவர்கள் கலந்துகொண்டனர் என்பதற்காகப் பூசகர் உட்பட ஒருசில பொதுமக்களைப்பிடித்து 14 நாள்கள் தனிமைப்படுத்துவதற்கு தனிமைப்படுத்தல் சட்டத்தை பிரயோகித்த சுகாதாரப் பிரிவு இன்று யாழ்ப்பாணத்தில் உறக்கத்தில் இருந்ததா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அபாய பிரதேசங்கள் அல்லது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகும் பகுதிகளில் இருந்து வருவோர் தொடர்பான தகவல்களை வழங்குமாறு வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தொலைபேசி இலக்கங்களை அறிவித்திருந்தார். அந்தத் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு சுகாதாரப் பிரிவின் நடவடிக்கை என்ன என வினவிய போது அதற்குப் பதிலளித்தவர்கள் யாழ். சுகாதார வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கூறினர்.

பின்னர் யாழ். சுகாதார வைத்திய அதிகாரியுடன்தொடர்புகொண்டபோது, அவர்களுக்குக் கூட்டம் நடப்பதே தெரியாதுஎன்பதுபோல்பதிலளித்தமையுடன், பல கூட்டங்களுக்குத் தங்களிடம் அனுமதி பெறப்பட்டது எனவும், இதற்கும் அனுமதி பெறப்பட்டதா என்பதை ஆராய்ந்து பார்பதாகவும் கூறினர்.

அப்படியானால் சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியைப் பெற்றால் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறலாமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதேபோல் வெளிமாவட்டங்களுக்குச் சென்று வந்த வாகன சாரதிகள், பஸ்களில் பயணிப்போர் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் இன்றைய கூட்டத்துக்குக் கொழும்பிலிருந்து வாகனங்களிலில் வந்தவர்களுக்குத் தனிமைப்படுத்தல் சட்டம் பொருந்தாதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

## கிராம அலுவலகரின் ......










(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலகராகக் கடமையாற்றும்

விஜி என அழைக்கப்படும் எஸ்.விஜியேந்திரன் (வயது - 55) என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் கடந்த 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் கடமை முடிந்து தனது வீடு நோக்கி சென்றுள்ளார். அதன்பின்னர் ஆத்தி மோட்டை - கள்ளியடியில் தலையில் பலத்த காயங்களுடன் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்தார்.

மொட்டையான ஆயுதம் ஒன்றால் (மரக்கட்டை போன்ற) பல தடவைகள் தலையில் தாக்கப்பட்டதால் நிர்வாக கிராம அலுவலகர் உயிரிழந்தார் என்று சட்ட மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ட்ரம்பின் அடி சறுக்குகிறது

சர்வதேச ஊடகங்கள் எல்லாவற்றையும் தொடர்ந்து நிறைத்து நிற்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாவது தொடர்ந்து இழுபடுகின்றது.

வெற்றி பெறுபவர் யார் என்பது விரைவில் வெளியாகினாலும் கூட, உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு இன்னும் ஓரிரு நாள்கள் செல்லக் கூடும்.

ஜனநாயகக் கட்சி வேட்பாளரும் முன்னாள் உப ஜனாதிபதியான ஜோ பைடனா, குடியரசுக் கட்சி வேட்பாளரும் தற்போதைய அதிபருமான றொனால்ட் ட்ரம்பா, யார் அடுத்த ஜனாதிபதி யார் என்ற இழுபறி நீடிக்கின்றது.

கடைசியாக ஐந்து மாநிலங்களின் முடிவுகளே அடுத்த அதிபர் யார் எனபதைத் தீர்மானிக்கப் போகின்றன.

பென்ஸில்வேனியா, ஜோர்ஜியா, நெவோடா, அரிசோனா, வட கரோலினா ஆகியவையே ஐந்து மாநிலங்கள்.

பல்வேறு மாநிலங்களில் வெளியான முடிவுகளின்படி மொத்தமுள்ள 538 பிரதிநிதிகளுக்கான ஆசனங்களில் 253 இடங்களை ஜோ பைடனும், 214 இடங்களை ட்ரம்பும் ஏற்கனவே கைப்பற்றியுள்ளனர்.

மொத்தம் 270 பிரதிநிதிகள் இடங்களைப் பெற்றவரே ஜனாதிபதியாக முடியும் என்ற நிலையில், நிலைமை ட்ரம்பின் காலை நழுவிச் செல்வதாகத் தெரிகின்றது.

இருபது உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டிய பென்ஸில்வேனியாவில் சுமார் 18 ஆயிரம் வாக்குகளை மேலதிகமாக ட்ரம்ப் பெற்றிருந்தாலும், இதற்கு முன்னர. ஆரம்பத்தில் அவர் அங்கு வைத்திருந்த பல லட்சம் மேலதிக வாக்குகள் என்ற நிலைமை வாக்குகள் எண்ணப்பட சுருங்கி இப்போது சில ஆயிரங்களுக்கு வந்து விட்டது.

நெவோடா (ஆறு உறுப்பினர்கள்), அரிசோனா (11 உறுப்பினர்கள்) ஆகிய இரண்டிலும் ஜோ பைடனே தொடர்ந்தும் முன்னிலையில் உள்ளார்.

பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட ஜோர்ஜியாவில் இலங்கை நேரப்படி இன்று மதியம் வரை முன்னணியில் இருந்த ட்ரம்ப் மெல்ல மெல்ல அதனை இழந்து, இப்போது பின்னடைவு கண்டு வருகின்றார். அங்கு தொடர்ந்து கணக்கில் எடுக்கப்படும் வாக்குகளில் ஜோ பைடன் பெரும் வெற்றி முகத்தில் இருக்கின்றார்.

ஜோர்ஜியாவை ட்ரம்ப் இழந்தால், இந்தத் தேர்தலில் அவர் வெல்வது என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத எட்டாக் கனியாகிவிடும்.

இப்போது வாக்குகள் எண்ணப்படும் ஐந்து முக்கிய மாநிலங்களில் பதினைந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வட கரோலினாவில் மட்டுமே ட்ரம்பின் நிலைமை ஓரளவு பத்திரமாக உள்ளது. அங்கும் கூட பல லட்சங்களில் இருந்து ட்ரம்பின் மேலதிக வாக்குகள் இப்போது வெறுமனே சுமார் 77 ஆயிரம் வாக்குகளாகக் குறைந்துவிட்டன.

தேர்தல் தோல்வி தவிர்க்க முடியாததாகி வருகின்றமையை உணர்ந்துள்ள அதிபர் ட்ரம்ப், அதன் காரணமாகத் தேர்தலில் மோசடிகள், குளறுபடிகள் போன்றவை இடம்பெற்றுள்ளன என்ற சாரப்பட செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார். சில மாநிலங்களில் வாக்கு எண்ணும் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறு கோரி அவரது தரப்பினர் தாக்கல் செய்த வழக்குகளை சமஷ்டி நீதிமன்றங்களின் நீதிபதிகள் நிராகரித்து விட்டனர்.

ஜனநாயகக் கட்சியினர் தங்களின் (குடியரசுக் கட்சியினரின்) நியாயமான வெற்றியை வாக்குகளைச் சூறையாடி கொள்ளையடித்து விட்டனர் என்ற ட்ரம்பின் குற்றச்சாட்டுக்கு அவர் தரப்பில் போதிய ஆதாரங்கள், சான்றுகள், விவரங்கள் முன்வைக்கப்படவில்லை என்பதும் பல தரப்புகளினாலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தோல்வியை எதிர்கொள்ள முடியாத ட்ரம்ப், இப்படி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது அபத்தம் என்று சுயாதீனப் பார்வையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்ற சர்ச்சைக்குரிய கடும் போட்டி ஒன்றின் முடிவில்தான் 2016 ஜனாதிபதித் தேர்தலின் போது ஹிலாறி கிளின்டன் அம்மையாரிடமிருந்து ட்ரம்ப் வெற்றிக்கனியைத் தட்டிப் பறித்தார் என்பது மறக்கக் கூடியதல்ல.

இப்போது வெளிப்படையாக வெற்றி தமது கையை விட்டு நழுவுகின்றது என்பது தெரிந்ததும், தமது தோல்வியை நியாயப்படுத்த இத்தகைய அபத்தக் குற்றச்சாட்டுக்களை அவர் சுமத்துகின்றார் என்பது அவர் தரப்பினருக்கே நன்கு தெரியும், புரியும் என்பதுதான் இதில் உள்ள அதிசயமாகும்.

# மக்களைக் கடுமையாக கண்காணிக்கப் பணிப்பு!

## அதிகாரிகளுக்கு விதித்தார் ஜனாதிபதி



ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் சுய தனிமைப்படுத்தல் நடைமுறைகளைக் கடுமையாகக் கண்காணிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கண்டறியப்பட்ட அனைத்து குடும்பங்களும் தத்தமது வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவ்வாறு தற்போது நாடளாவிய ரீதியில் சுமார் 31 ஆயிரத்து 457 வீடுகளில் 84 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் 13 ஆயிரத்து 911 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 676 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதன் பின்னரும் முறையாகக் கண்காணிக்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கொவிட் ஒழிப்பு விசேட செயலணி நேற்று (வியாழக்கிழமை) ஒன்றுகூடியபோதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

நோய்த்தொற்றாளர்கள் சமூகத்தில் கண்டறியப்பட்டால் அவர்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்கள் வசிக்கும் பிரதேசம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தேவை ஏற்படின் அந்தப் பிரதேசத்தைத் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

தோட்டங்கள் மற்றும் அடுக்குமாடி வீடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார மத்திய நிலையங்களை மொத்த விற்பனைக்கு மட்டும் மட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றியும் பி.சி.ஆர்.பரிசோதனைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டும் மிகுந்த கவனத்துடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மரக்கறி, பழங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துக்கொண்டு மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்தில் ஈடுபடும் லொறிகளுக்கு ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரங்கள் அவசியமில்லை. கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தின் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக பேணுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும், தனியார் வைத்தியசாலைகளின் பங்களிப்புடன் சுகாதார அமைச்சினதும் கடற்படையினதும் கண்காணிப்பின் கீழ் வர்த்தக வலயத்தை அண்டிய பிரதேசங்களில் பி.சி. ஆர்.பரிசோதனைகளை எழுமாறாகவும் தொடர்ச்சியாகவும் செய்வதற்கும் ஜனாதிபதியால் பணிப்புரை வழங்கப்பட்டது.

# உயிர்த் தியாகம் செய்வதிலும் பார்க்க பவித்திரா பதவி விலகுவது மேலானது!

## முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு



சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும். உயிரைத் தியாகம் செய்வேன் எனக் கூறத் தேவையில்லை என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மத நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொண்ட செயற்பாடு பல்வேறு தரப்பினராலும் வெகுவாக விமர்சிக்கப்பட்டது.

இதன்காரணமாக அதுதொடர்பாக அவர் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார். அதன்போது தனது உயிரைத்தியாகம்செய்தேனுாகவோ கொரோனா வைரஸை இல்லாதொழிக்க முடியுமென்றால், அதற்கும் தான் தயாராக இருக்கிறார் எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே மங்கள சமரவீர மற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை சுகாதார அமைச்சரால் கையாள முடியாவிட்டால், அவர் பதவி விலகவேண்டும்.

மாறாக தனது உயிரைத் தியாகமாக வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார் எனக் கூறத் தேவையில்லை. உயிர்த்தியாகம் அல்லது தற்கொலை என்பது பௌத்த தர்மத்துக்கு விரோதமானதாகும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 199 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று!

மேல் மாகாணத்தில் புதிதாக 199 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கொவிட் - 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 258 ஆக உயர்ந்துள்ளதுடன், சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 1,350 ஆகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, பொரளை பொலிஸ் நிலையத்தில் 41 பொலிஸ் அலுவலர்களுக்கு நேற்று முன்தினம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து, பொரளை பொலிஸ் நிலையத்தில் மாத்திரம் இதுவரையில் 56 அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று பதுளை மாவட்டத்தில் மொத்தமாக இதுவரையில் 24 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அங்கு 2 ஆயிரத்து 193 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் 34 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர் என மாவட்ட செயலாளர் எம்.பி.ஆர். புஸ்பகுமார தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள சர்வதேச முதலீட்டாளர்களுக்கு அழைப்பு!

## விடுத்தார் பிரதமர் மோடி




இந்தியாவின் உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு துறைகளில் முதலீடு செய்ய சர்வதேச முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும் என பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில் காணொலி தொடர்பாடல் மூலம் உரையாற்றிய போதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

மேலும், கொரோனா பெருந்தொற்றுக்கு எதிரான துணிச்சலான போராட்டத்தின் மூலம் இந்தியாவின் உண்மையான வலிமையை உலகம் கண்டுள்ளதாக மோடி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தியா தற்சார்பு அடைய வேண்டும் என்பது வெறும் தொலைநோக்குப் பார்வை மட்டுமல்லாது சிறப்பாகத் திட்டமிடப்பட்ட பொருளாதார யுக்தி என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், தொழில்கள் மற்றும் திறன் மிக்க பணியாளர்களைக் கொண்டு, இந்தியாவை சர்வதேச உற்பத்தி மையமாக மாற்றுவதே அதன்நோக்கம் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# என்ன விலை கொடுத்தாவது எல்லையைப் பாதுகாப்போம்!

## அமைச்சர் ராஜ்நாத் சிங் திடசங்கற்பம்



என்ன விலை கொடுத்தாவது நாட்டின் எல்லையைக் காக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டுகருத்து தெரிவித்தபோதே அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் –

இந்தியாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் உறுதியுடன் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

எல்லைப் பிரச்சினையை அமைதி பேச்சு மூலம்தீர்க்கமுயற்சிப்பதாகத் தெரிவித்த அவர், ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தை மதித்து செயற்பட உறுதி பூண்டுள்ளதாகவும் கூறினார்.

எல்லையில் அத்துமீறலை இந்தியா ஒரு போதும் அனுமதிக்காது என்றும் ராஜ்நாத்சிங் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதேவேளை லடாக் விவகாரம் தொடர்பாக இந்தியா, சீனா இராணுவ அதிகாரிகள் இடையே நாளை 8 ஆவது கட்ட பேச்சு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்த ஆண்டின் இறுதிக்குள் கொரோனாவை விரட்டுவோம்!

## சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் சபதம்



பிரதமரின் மக்கள் இயக்கத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தி இந்த வருடத்தின் இறுதிக்குள் கொரோனாவை விரட்டுவோம் என மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் துணை நிலை ஆளுநர், மாநில சுகாதார அமைச்சர் மற்றும் மாநில உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்த அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் –

எதிர்வரும் 2021 ஆம் ஆண்டின் இடையில் முன்கள சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்ட நாட்டின் 20 – 25 கோடி மக்களுக்கு தடுப்பு மருந்துகள் வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது.

இந்தியாவில் தற்போது 92 சதவீதமானோர் நோயிலிருந்து குணமடைந்துள்ளனர். இது டெல்லியில் 89 சதவீதமாக உள்ளது. இந்த நோயால் நாட்டில் 1.49 சதவீதமானோர் உயிரிழந்துள்ளனர்.

டெல்லியில் உயிரிழந்தோரின் சதவீதம் 1.71 வீதமாகவுள்ளது. வடக்கு, மத்திய, வடகிழக்கு, கிழக்கு, வடமேற்கு மற்றும் தென்கிழக்கு மாவட்டங்களில் நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றமை கவலை அளிக்கிறது.

கடுமையான சுவாச நோய்த்தொற்று மற்றும் நோயின் அறிகுறி உள்ளவர்களுக்குப் பரிசோதனை கட்டாயமாக்கப்பட வேண்டும். – என அவர் தெரிவித்துள்ளார்.

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்ய ஸ்டாலின் கடிதம்

## தமிழக ஆளுநருக்கு எழுதினார்



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 பேரை விடுதலை செய்ய வலியுறுத்தித் தமிழக ஆளுநருக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

மாநில அரசுக்கு அதிகாரம் உள்ள சட்டங்களின் கீழான குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யவோ, தண்டனையை நிறுத்தி வைக்கவோ, குறைக்கவோ ஆளுநருக்கு அதிகாரம் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஏழு பேரை விடுதலை செய்யக்கோரும் மாநில அரசின் பரிந்துரை மீது எந்த முடிவும் எடுக்கப்படாமல் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருக்கின்றமை சட்டத்தின் அடிப்படையில் மாநிலத்தில் ஆட்சி நடைபெறவில்லையோ என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தின் பிரதியை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய பருவநிலை மாநாட்டில் பங்குகொள்ள மோடிக்கு அழைப்பு!

பிரித்தானியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பருவநிலை தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய தலைநகர் லண்டனில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் புதிய பருவநிலைத் திட்டங்களை முன்வைக்க விரும்பும் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும்.

அதனடிப்படையில் இம்முறை நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாடு இந்த மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. கொரோனா காரணமாக அந்த மாநாடு அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி – 1984.01.05
மதம் – இந்து V
நட்சத்திரம் – திருவோணம்
பாவம் – 45 3/4
கல்வி – A/L
தொழில் – தோட்டம், ஆட்டோ
எதிர்பார்ப்பு – சாதாரண படித்த பெண்.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி – 1991.03.23
மதம் – இந்து V
நட்சத்திரம் – திருவாதிரை
பாவம் – 30 1/4
சூரி/செவ் – 1 இல்
கல்வி – Bsc பட்டதாரி
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – அரச உத்தியோகம்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி.
இமையாணன் மேற்கு.
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


# நடிகர் விஜய் மக்கள் இயக்கத்தை கட்சியாக அறிவித்தார் சந்திரசேகர்



விஜய் மக்கள் இயக்கமானது ‘அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம்’ என்ற பெயரில் கட்சியாக மாற்றப்படுவதாக நடிகர் விஜயின்தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

அத்துடன், விஜய் மக்கள் இயக்கத்தை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ததற்கும், விஜய்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும் சந்திரசேகர் விளக்கமளித்துள்ளார்.

இந்நிலையில் தந்தையின் அரசியல் கட்சி அறிவிப்பு தொடர்பாக நடிகர் விஜய் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் –

‘இன்று (நேற்று) எனது தந்தை ஓர் அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளார் என்பதை ஊடகங்களின் வாயிலாக அறிந்தேன்.

இந்நிலையில், அவர் தொடங்கியுள்ள கட்சிக்கும் எனக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எவ்வித தொடர்பும் இல்லையெனத் திட்டவட்டமாக எனது இரசிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதன்மூலம் அவர் அரசியல் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளும் என்னைக் கட்டுப்படுத்தாது என்பதை தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

மேலும், என்னுடைய ரசிகர்கள், எனது தந்தை கட்சி ஆரம்பித்துள்ளார் என்பதற்காக தங்களை அந்தக் கட்சியில் இணைத்துக்கொள்ளவோ கட்சியில் பணியாற்றவோ வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் கட்சிக்கும் நமக்கும் நமது இயக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எனது பெயரையோ புகைப்படத்தையோ, அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கத்தின் பெயரையோ தொடர்புபடுத்தி ஏதேனும் விவகாரங்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். – எனத் தெரிவித்துள்ளார்.

# ஒபாமாவின் சாதனைகளை முறியடித்து புதிய வரலாறு படைத்தார் ஜோ பைடன்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் அதிக வாக்குகளைப் பெற்றுள்ள ஜனாதிபதி வேட்பாளர் என்ற சாதனையை ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோ பைடன் பதிவு செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளி வந்தவண்ணம் உள்ளன. இதுவரை வெளியான முடிவு களின் அடிப்படையில் ஜோ பைடன் 264 தேர்தல் தொகுதிகளில் முன்னிலையில் உள்ளார்.

தற்போதுவரை ஜோ பைடன் பெற்றுள்ள வாக்குகள் 70,298,271 என பதிவாகியுள்ளன. இது 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதி பராக் ஒபாமா பெற்ற 69,498,516 வாக்குகள் என்ற சாதனையை இது முறியடித்துள்ளது.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இதுவரை 67,567,559



வாக்குகளைப் பெற்றுள்ளார். இது 2016 தேர்தலில் அவர் பெற்ற வாக்குகளைவிடவும் 2012 இல் ஜனாதி பதி பராக் ஒபாமா பெற்ற வாக்குகளைவிடவும் அதிகமா கும்.

வாக்குகளை பெறுவதில் ஜோ பைடன் சாதனை புரிந்தாலும் தேர்தல் சபை வாக்குகள் அடிப்படையில் ஜனாதிபதி தேர்வு நடைபெறுவதால், இரு வேட்பாளர்களின் ஆதரவாளர்களும் தங்கள் வேட்பாளரே இறுதியில் ஆட்சியை கைப்பற்றுவார் என கூறி வருகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெள்ளை மாளி கையை கைப்பற்ற, ஓர் அமெரிக்க வேட்பாளர் மொத் தம் உள்ள 538 தேர்தல் தொகுதிகளில் 270 தேர்தல் தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்பது குறிப் பிடத்தக்கது.

## அமெ.வை விட்டு வெளியேறியோர் வாக்களிப்பில் ஈடுபட்டுள்ளார்கள்!

### குடியரசுக் கட்சி குற்றச்சாட்டு

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய் வதற்கான தேர்தலின் முடி வுகள் வெளியிடப்படுவதில் தொடர்ந்தும் இழுபறிகள் நீடிக்கின்றன.

இந்நிலையில் அமெரிக் காவின் முக்கிய மாகாணங் களின் ஒன்றான, நெவொடா மாகாணத்தின் வாக்கு எண் ணும் பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலை யில், அம்மாகாணத்தின் குடியரசுக் கட்சியினரால் குற் றசாட்டு முன்வைக்கப்பட்டுள் ளது.

குறித்த குற்றச்சாட்டில் ஏறக்குறைய 3,062 வாக்கு மோசடி சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

நெவொடா மாகாண குடி யரசுக் கட்சியினரால் அமெ ரிக்க சட்ட மா அதிபர் வில்லி யம் பார்க்கு அனுப்பி வைத் துள்ள கடிதத்திலேயே குறித்த குற்றசாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.

இதேவேளை அந்தக் கட் சியினரால் ருவிட்டர் பக்கத் தில் வெளியிடப்பட்டுள்ள பதி வில், அமெரிக்காவை விட்டு வெளியேறி வேறு நாடுக ளில் வசித்தவர்கள் பலரும் இந்தத் தேர்தலின் போது தமது வாக்குகளை பதிவு செய்திருந்தனர் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நெவொடா மாகாணத்தின் வாக்கெண் ணும் பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், அங்கு அமெரிக்க ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்பை விட ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் முன்னிலையில் உள்ளார்.

இதுவரையில் எண் ணப்பட்டுள்ள 89 வீதமான வாக்குகளின் அடிப்படையில் ஜோ பைடன் 11 ஆயிரத்து 400 வாக்குகளால் முன் னிலை பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## அமெரிக்கத் தேர்தல் முடிவுகளை கடுமையாக எதிர்க்கிறார் ட்ரம்ப்!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறு வதற்கான போதிய இடங்களை ஜனநாயகக் கட்சி நெருங்கிவரும் சூழலில் வாக்கு எண்ணும் பணியை நிறுத்துமாறு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண் டும் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கடந்த மூன் றாம் திகதி நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப் பட்டு வருகின்றன.

இதில், அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற் கத் தேவையான 270 தேர்தல் சபை வாக்குகளை நோக்கி ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோ பைடன் முன்னேறிவருகிறார்.

இதுவரை, ஜோ பைடன் 253 தேர்தல் சபை வாக்குகளுடன் முன்னிலையில் உள்ளதுடன் டொனால்ட் ட்ரம்ப் 214 தேர்தல் சபை வாக்கு களைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, பென்சில்வேனியா, வட கரோ லினா, ஜோர்ஜியா, அலாஸ்கா மற்றும் நெவொடா ஆகிய மாநிலங்களில் தேர்தல் முடிவுகள் வெளி வராமல் இழுபறியில் உள்ளன.

இதேனிடையே, நெவொடா மாநிலத்தில் ஜோ பைடன் முன்னிலை பெற்றுள்ள நிலையில் அதனைக் கைப்பற்றினால் ஆறு தேர்தல் சபை வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக ஆட்சியைக் கைப்பற்ற வாய்ப்புச் சிரிவு எனத் தெரிவிக்கப்படுகிறது.



இதேவேளை, முடிவுகள் வெளிவராத பென்சில் வேனியா, ஜோர்ஜியா, அலாஸ்கா ஆகிய மாநி லங்களில் டொனால்ட் ட்ரம்ப் பின்னடைந்து வரு கிறார்.

இந்தச் சூழலில், நியூயோர்க், அரிசோனா ஆகிய மாநிலங்களில் ட்ரம்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், 'வாக்கு எண்ணிக்கையை நிறுத் துங்கள்' என இன்று வெளியிட்டுள்ள டுவிட்டர் பதி வில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தி யுள்ளார். இந்நிலையில், இதற்கு ஜனநாயகக் கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இதேவேளை, தேர்தல் வாக்குகளை எண்ணு வதை இடைநிறுத்தும் வகையில் டொனால்ட் ட்ரம்ப் நீதிமன்றத்தை நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியாவுக்கு போக்குவரத்து: டென்மார்க் கட்டுப்பாடுகள் விதிப்பு

தனிமைப்படுத்தலுக்கு உட்படாத வகை யில் பிரித்தானியாவுக்கு பயணங்களை மேற்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் இருந்து டென்மார்க் நீக்கப்படுவதாக பிரித்தானிய போக்குவரத்து துறை செய லாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி இன்று (வெள்ளிக்கிழமை) முதல் பிரித்தானியாவுக்கு பயணப்படும் டென்மார்க் நாட்டினர் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால சூழ்நிலைகளை கருத் திற்கொண்டு ஒரே இரவில் இந்தத் தீர் மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், டென் மார்க்கில் விலங்குகளுக்கு ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் மனிதர்களுக்கும் தொற்றலாம் என்ற அச்சத்தின் காரண மாகவே நெதர்லாந்து குறித்த பட்டியலில் இருந்து நீக்கப்படுவதாகவும் பிரித்தா னியா தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் ஏற் பட்டுள்ள கொரோனா தொற்று அச்சம் காரணமாக பல நாடுகள் சுகாதார கட்டுப் பாட்டு நடவடிக்கைகளை பலப்படுத்தி யுள்ளன.

இத்தாலி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடு களில் இறுக்கமான கட்டுப்பாட்டு நடவடிக் கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலை யில், இங்கிலாந்திலும் நாடளாவிய முடக் கம் அமுலில் உள்ளது.

இந்நிலையில், மிங்க் எனப்படும் சிறிய வகை விலங்கு இனத்தின் மத்தியில் கொரோனா வைரஸ் பரவியுள்ளமை டென்மார்க்கில் பெரும் அச்சத்தை ஏற் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நியூஸிலாந்து பிரதமராக ஆர்டெர்ன் பதவியேற்றார்!



தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் நியூஸிலாந்தின் பிரதமராக ஜசிந்த ஆர்டெர்ன் இன்று வெள்ளிக் கிழமை பதவியேற்றுள்ளார்.

ஜசிந்த ஆர்டெர்னும் அவரது புதிய அமைச்சர்கள் குழுவும் வெலிங்டன் அரச மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வின்போது ஆங் கிலம் மற்றும் மாவோரி மொழிக ளில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

நியூஸிலாந்து பிரதமர் தலை மையிலான புதிய அமைச்சர வையில் எட்டு பெண்கள் உள் ளடங்குகின்றனர்.

கடந்த மாதம் நியூஸிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 40 வயதான ஆர்டெர்னின் தொழி லாளர் கட்சி மகத்தான வெற்றியை பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் 77 நாள்களுக்குள் அமெ. இணையும்

### ஜோ பைடன் அதிரடி நடவடிக்கை

பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் 77 நாள்க ளுக்குள் அமெரிக்கா இணையும் என அமெ ரிக்க ஜனநாயகக் கட்சி யின் ஜனாதிபதி வேட் பாளர் ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா புதன் கிழமையன்று, அதிகா ரபூர்வமாக பாரிஸ் பரு வநிலை ஒப்பந்தத்திலி ருந்து வெளியேறியுள்ள நிலையில், பைடனின் இந்த அறிவிப்பு வெளி யாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதி பதித் தேர்தல் நடை பெற்று முடிந்துள்ள நிலையில் தேர்தல் முடி வுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இம்முறை தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்பும் ஜனநாயகக் கட்சி சார் பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பைட னும் போட்டியிட்டுள்ள னர்.

இந்நிலையில், இழு பறிநிலை காணப்பட்ட சில மாநிலங்களில் தேர்தல் முடிவுகள் தற் போது வெளியிடப்பட்டு வருகின்றன.

வேட்பாளர் ஒருவ ரின் வெற்றிக்கு 270 இடங்கள் தேவை யென்ற நிலையில் தற்போது ஜோ பைடன் 253 இடங்களைக் கைப்பற்றி டொனால்ட் ட்ரம்பை விட மேலும் முன்னிலை பெற்றுள் ளார். ட்ரம்ப் 214 இடங் களைக் கைப்பற்றியுள் ளார்.

இந்நிலையில் கால நிலை மாற்ற பாதிப்புக ளுக்கு எதிரான பாரிஸ் பருவநிலை மாநாட்டு ஒப்பந்தத்தில் அமெ ரிக்கா இணைவது தொடர் பாக ஜோ பைடன் கருத்து தெரிவித்துள்ளார்.

'சரியாக 77 நாள்க ளில் எனது நிர்வாகத் தின் கீழ் அமெரிக்கா மீண்டும் பருவநிலை ஒப்பந்தத்தில் இணை யும்' என உறுதியளித் துள்ளார்.

# நாட்டினது சில முக்கிய பிரமுகர்களே கொரோனா தடுப்பூசியை பெறுகின்றனர்!

## நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றச்சாட்டு



நாட்டிலுள்ள சில முக்கிய பிரமுகர்கள் சீனாவிடம் இருந்து கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நளின் பண்டார மேலும் கூறியுள்ளவை வருமாறு -

தற்போது நாடளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.

கொரோனா தொற்றுக்குள்ளாகிய பலர் உயிரிழந்துள்ள போதிலும், பிரேத பரிசோதனைகளின் பின்னரே அவர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்படுகிறது.

இது போன்ற அச்சுறுத்தலான நிலைமைகள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். முழு நாடும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் அரசாங்கத்துக்கு இது வசந்த காலமாக மாறியுள்ளது.

வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் இலங்கையர்களை, நாட்டுக்கு அழைத்து வருகின்றமை தொடர்பாக அரசாங்கம் அக்கறை செலுத்தாமல் இருக்கின்றது.

அவர்கள் நாட்டுக்கு வருவதற்காக பயணசீட்டைப் பெறுவதற்குப் பெருந்தொகையான பணத்தைச் செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு வந்தவுடன், அவர்கள் தனிமைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், தனிமைப்படுத்தல் நிலையங்களாக ஹோட்டல்கள் பயன்படுத்தப்படும் போது, ஹோட்டல் உரிமையாளர்கள் ஆளும் தரப்பினருடைய ஆதரவாளர்களாக இருக்கின்றமையால் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் இலாபம் ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்பாடாக அந்த முயற்சி அமைந்திருக்கின்றது.

சுகாதார அமைச்சர் மக்களைக் காப்பாற்றுவதற்காக கடலில் குதிப்பார் எனவும், மந்திர நீர் நிரப்பப்பட்ட நீரை ஆற்றில் கலந்தும் நாட்டு மக்களுக்கு மூட நம்பிக்கையை ஏற்படுத்துகின்றார்.

ஆனால், பிரபுக்களின் குடும்பத்தை சேர்ந்தவர்கள், வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக சீனாவில் தயாரிக்கப்பட்டுள்ள, தடுப்பூசிகளை 70 தொடக்கம் 140 டொலர்கள் செலவில் பெற்றுக் கொண்டு பயன்படுத்திக் கொள்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

பிரபுக்களின் குடும்பத்தினர் எந்த தடுப்பூசிகளைப் பயன்படுத்தினாலும் எமக்கு சிக்கல் இல்லை. மாறாக நாட்டு மக்களுக்கும் அந்த வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

ஆளும் தரப்பினருக்கு மக்கள் மீது உள்ள அக்கறையை விட தங்கள் மீதே அக்கறை அதிகமாக உள்ளது. - என குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு மீற்றர் இடைவெளியை மக்கள் பின்பற்ற வேண்டும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, நவ.06

ஒரு மீற்றருக்கு மேல் வைரஸ் பயணிக்காது என்று கூற முடியாது. எனவே ஒரு மீற்றர் இடைவெளி என்பதை விட முடிந்தளவு ஒரு மீற்றர் அல்லது அதனை விட கூடிய இடைவெளியைப் பேணுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் போன்றே மரணங்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்த போக்கைக் காண்பிக்கின்றது.

இவ்வாறான நிலையில் அவதானம் மிக்க பகுதிகளை அடையாளப்படுத்தாவிட்டால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். 357 மருத்துவ சுகாதார பிரிவுகளில் 60 இற்கும் குறைவான பகுதிகளிலேயே அதிக - கூடிய - அவதானமுடைய பகுதிகள் காணப்படுகின்றன.

எனவே, கட்டுப்படுத்தக் கூடிய மட்டத்திலேயே நிலைமை காணப்படுகிறது. அண்மையில் வீடுகளிலேயே இறந்த சிலருக்கு முதலாவது பரிசோதனையில் தொற்று ஏற்படவில்லை என்ற முடிவும் உயிரிழந்ததன் பின்னர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்ற முடிவும் கிடைத்துள்ளது.

இவ்வாறான நிலைமை தொடருமானால் தற்போது தொற்றாளர்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் நாம் மரணங்களைப் பற்றி பேச வேண்டியேற்படும்.

மேலும், உயிரிழந்தவர்களுக்கு சமூகத்திலிருந்து வைரஸ் தொற்று ஏற்படவில்லை. மாறாக வீட்டுக்குள் வைரஸ் கொண்டு செல்லப்பட்டுள்ளது.



சிறைச்சாலைகள், பொருளாதார மத்திய நிலையங்கள், ஆடை தொழிற்சாலை என்பவற்றில் வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும் அது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

பி.சி.ஆர். பரிசோதனையை விட செலவு குறைந்த முறையில் துரிதமாக முன்னெடுக்கப்படும் பரிசோதனைக்கு இலங்கை மாற வேண்டும். அத்தோடு மீண்டும் மீண்டும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு மீற்றருக்கு மேல் வைரஸ் பயணிக்காது என்று கூற முடியாது. எனவே ஒரு மீற்றர் இடைவெளி என்பதை விட முடிந்தளவு ஒரு மீற்றர் அல்லது அதனை விட கூடிய இடைவெளியைப் பேணுமாறு அறிவுறுத்துகின்றோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தலில் இருந்து சில பகுதிகள் விடுவிக்கப்பட்டன

கொழும்பு, நவ.06

கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த புளத்கொஹுபிட்டிய பொலிஸ் பிரிவு தனிமைப்படுத்தல் அறிவிப்பிலிருந்து விடுபட்டுள்ளது.

அத்துடன், கேகாலை மாவட்டத்தின் கல்கமுவ பிரதேச சபை பகுதிகளிலும் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேல்மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு வரும் ஒன்பதாம் திகதியுடன் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாக் கொத்தணி பாதிப்பு மட்டும் 9 ஆயிரத்தைக் கடந்தது!

கொழும்பு, நவ.06

நாட்டில் நேற்று 383 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்ட அனைவரும் ஏற்கனவே கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒன்பதாயிரத்தைக் கடந்து ஒன்பதாயிரத்து 92 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நாட்டில் கொரோனாத் தொற்றில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 570 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று மட்டும் 765 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை ஆறாயிரத்து 623 தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 918 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

# வடக்கின் நான்காவது சிகிச்சை நிலையம் மாங்குளம் வைத்தியசாலையில் அமைந்தது

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

வடக்கு மாகாணத்தில் நான்காவது கொரோனாச் சிகிச்சை நிலையமாக மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் ஒரு பிரிவு மாற்றப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

30 நோயாளர் படுக்கைகளைக் கொண்ட கொரோனா சிகிச்சை நிலையமாக இந்தப் பிரிவு இன்றுமுதல் இயங்க ஆரம்பித்துள்ளமை தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை மற்றும் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒரு பகுதி கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தில் கிருஷ்ணபுரம் பகுதியில் 100 படுக்கைகளைக் கொண்ட கொரோனா சிகிச்சை நிலையம் அமைக்கப்படுகின்றது.

# ஆண்டுபல காண்கவென ஆசிகூறி வாழ்த்துகிறேன்!

**சோதனையும் சாதனையும் சொந்தமாய் கொண்டவரே**
**சோர்வில்லா உழைப்பைச் சொத்தாக்கி நிற்பவரே**
**காலையிலும் மாலையிலும் கருத்துரைக்கும் வகையினிலே**
**காலைக் கதிரதனை தந்தவரே வாழ்த்துகிறேன் !**

**பாரதத்துக் கண்ணன்போல் பலரிடமும் பழகுகிறாய்**
**பக்குவமாய் கருத்துக்களை பகிர்ந்துமே மகிழுகிறாய்**
**தீதுகண்ட போதெல்லாம் சீறியே எழுகின்றாய்**
**சிந்திப்பார் மனமுறைய தந்திட்டாய் காலைக்கதிர் !**

**மின்னலாய் வெளிச்சமிடும் மேலான பலசெய்தி**
**கன்னல் தமிழினிலே காட்டிவிடும் ஆளுமையே**
**நல்லதொரு தமிழிதழாய் காலைக்கதிர் ஈந்தளிக்கும்**
**வல்லமையை வாழ்த்தியே மனமகிழ்வு எய்துகிறேன்!**

**ஐந்தகவை தொட்டுநிற்கும் அன்னைத்தமிழ் காலைக்கதிர்**
**ஆண்டுபல காண்கவென அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்**
**தூண்டலொடு துலங்கலினை தொட்டுநிற்கும் காலைக்கதிர்**
**ஆண்டுபல காண்கவென ஆசிகூறி வாழ்த்துகிறேன்!**

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேர்ண், ஆஸ்திரேலியா

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.11.2020 இல் வெளியிடப்பெற்றது.